# மாநகர வெள்ளப் பேரிடருக்கு நிரந்தரமான தீர்வு காணுங்கள்



கோலாலம்பூர், அக். 22- கோலாலம்பூர் மாநகரை அடிக்கடி உலுக்கிக் கொண்டிருக்கும் வெள்ளப் பேரிடர் சம்பவங்களுக்கு உடனடியாக நிரந்த தீர்வு காணப்பட வேண்டும் என்று வங்சாமாஜு கெஅடிலான் தொகுதித் தலைவர் ஹென்றி லாய் வலியுறுத்துகிறார்.

அண்மைய காலமாக நாட்டில் பருவமழை காரணமாக பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதன் காரணமாக கோலாலம்பூர் மாநகரில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வருகிறது. அடைமழை மற்றும் திடீரென்று பெய்யும் மழை காரணமாக கோலாலம்பூர் மாநகர மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

வெள்ளப் பெருக்கு காரணமாக போக்குவரத்து நெரிசல் மோசமடைகிறது. மணிக்கணக்கில் வாகன நெரிசலில் சிக்கி மக்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு, விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்றவை நாள்தோறும் நடைபெறும் பரபரப்பான இடமாக கோலாலம்பூர் விளங்குகிறது.

ஆனால் கட்டமைப்பு வசதிகள் இன்னமும் சிறப்பாக இல்லை. இதில் நிலவும் பலவீனங்களை களைய வேண்டும். தூரநோக்கு திட்டங்கள் மூலமாக வெள்ளப் பிரச்சினைக்கு சரியான தீர்வு காண கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒற்றுமை அரசாங்கத்தில் அனைத்து நிலைகளிலும் ஆக்ககரமான அணுகுமுறை திட்டங்களை எடுப்பதன்மூலம் நாம் தீர்வு காண முடியும் என்றும் ஹென்றி லாய் தெரிவித்தார்.